Life of Christ
Tamil



# கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை

## 3 இயேசு தீர்க்கதரிசியும் இராஜாவும்

- மோசேயைப் போன்ற ஓர் தீர்க்கதரிசி
- இயேசுவினுடைய இராஜ்யத்தின் பிரமாணங்கள்
- இயேசுவின் பிரமாணங்களைக் கைக்கொள்ளல்

## மோசேயைப் போன்ற ஓர் தீர்க்கதரிசி.

மோசே ஓர் பெரிய தீர்க்கதரிசியாகவும், தலைவராகவும் இருந்தான். அவன் தன்னுடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து வழிநடத்தி அவர்களுக்குத் தேவனுடைய பிரமாணங்களைக் கொடுத்தான். தேவன், மேசியா தேவனுடைய செய்தியை ஜனங்களுக்கு வெளிப்படுத்தும் ஓர் தீர்க்கதரிசியென, அவர்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி அவர்களின் இராஜாவாய் புதிய பிரமாணங்களைக் கொடுப்பார் என்றும் மோசேக்கு வெளிப்படுத்தினார்.

> "உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவர்களுக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்."
> உபாகமம் 18:18, 19.

தேவன் மோசேக்கூடாக கொடுத்த நியாயப் பிரமாணங்களினால் வருடக்கணக்காக ஜனங்கள் நியாயந்தீர்க்கப்பட்டனர். மேசியா வெளிப்படும்போது அவை மாற்றப்படும் என்று மோசே எழுதினான். மேசியாவின் வார்த்தைகளின்படி சகலரும் நியாயந்தீர்க்கப்படுவர். ஆகவே இன்று தேவன் எவ்விதமாக நாம் ஜீவிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை அறிய விரும்பினால் இயேசுவினுடைய போதனைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

### நீர் செய்ய வேண்டியது

1. தேவ பிரமாணங்களை இயேசுவுக்கு முன் பெற்றுக் கொண்ட தீர்க்கதரிசியின் பெயர் ..................................
2. மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி யார் ? ..................................

© 1983. All Rights Reserved
International Correspondence Institute
Brussels, Belgium
D/1985/2145/15

## இயேசுவினுடைய இராஜ்யத்தின் பிரமாணங்கள்.

### மகிழ்ச்சியாய் இருப்பவர் யார் ?

இயேசு மலைமீதிலிருந்து, அவருடைய சீஷர்களுக்கு வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களைப் போதித்தார். அவரது செய்தியை ''மலைப் பிரசங்கம்'' என்று நாம் கூறுகிறோம். தேவன் அளிக்கின்ற சந்தோஷ நிலையை அவர் உபதேசித்தார்.



''ஆவியில் எளிமையுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. துயரப்படுகிறவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; தேவ வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்வார்கள். தேவ சித்தத்தைச் செய்ய வாஞ்சிப்போர் மகிழ்ச்சியானவர்கள்; தேவன் அவர்களைத் திருப்தி செய்வார். மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிப்போர் மகிழ்ச்சியானவர்கள்; தேவன் அவர்களுக்கு இரக்கம் காண்பிப்பார். இருதயத்தில் சுத்தமுள்ளோர் மகிழ்ச்சியானவர்கள்; அவர்கள் தேவனைக் காண்பார்கள். சமாதானம் பண்ணுபவர்கள் மகிழ்ச்சியானவர்கள்; தேவன் அவர்களைத் தம் புத்திரர் என்றழைப்பார். தேவ விருப்பத்தைச் செய்து உபத்திரவம் அனுபவிப்போர் மகிழ்ச்சியானவர்கள்; தேவனுடைய ராஜ்யம் அவர்களுடையது. என்னை பின்பற்றுவதன் நிமித்தம் உங்களை நிந்தித்து, பலவிதமான பொய்க்குற்றச் சாட்டுகளை உங்கள் பேரில் சொல்வார்களானால், சந்தோஷப்பட்டு களிகூருங்கள், ஏனெனில் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்பு ஜீவித்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்புறுத்தினரே. மத்தேயு 5:3-12.

### இராஜ்யத்தின் அங்கத்தவர்களது குணாதிசயங்கள்.

மோசேயினூடாக தேவன் நாம் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்னும் பிரமாணங்களைக் கொடுத்தார். அவை மாற்றப்படவில்லை. ஆனால் இயேசுவின் பிரமாணங்கள் மோசேயினதைப் பார்க்கிலும் தரத்தில் உயர்ந்ததாயிருக்கின்றன மோசே ஜனங்களுக்கு எதைச்செய்ய வேண்டும் என்று கற்பித்தான் ஆனால் இயேசுவோ எப்படி இருக்க வேண்டும் என்று கற்பித்தார். நாம் உம்மைப்போன்று ஜீவியத்திற்கு உருசியைக் கொடுப்பவர்களாயும், வெளிச்சமாய் ஜனங்களுக்குத் தேவனண்டை சேரும் வழியைக்காண்பிப்பவர்களாயும் இருக்க வேண்டும்.

''நீங்கள் சகல மனுஷருக்கும் உப்பைப் போல் றிருக்கிறீர்கள். .......... நீங்கள் முழு உலகிற் கும் ஒளியாயிருக்கிறீர்கள். .......... ஜனங்கள் முன்பாக உங்கள் வெளிச்சம் பிரகாசிக்க வேண் டும், ஏனெனில் அவர்கள் உங்கள் நற்கிரியை களைக் கண்டு, பரலோகத்திற்கும் பிதாவை மகிமைப்படுத்தும்படியாக.''
மத்தேயு 5:13-16.

### நீர் செய்ய வேண்டியது

3. ஒருவர் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து அதிகமாக பேசும் பிரமாணங்கள் யார் மூலம் கொடுக்கப்பட்டது? .........
4. ஒருவர் எப்படிப்பட்டவராய் இருக்க வேண்டும் என்பதை அதிகமாகப் பேசும் பிரமாணங்கள் யாரால் கொடுக்கப்பட்டது .............. ...... ...................
5. இயேசு சொன்னார் நாம் உலகிற்கு......... போன்றும், ..............ப் போன்றும் இருக்கிறோம்.

### எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் உரிய பிரமாணங்கள்




மோசேயினுடைய பிரமாணத்தின்படி ஓர் மனுஷனை அவனுடைய கிரியைகளைக் கொண்டு நியாயந்தீர்க்கமுடியும். ஒவ்வோர் மனுஷனும் தனது நடத்தைகளை நியாயந்தீர்த்துக் கொள்ளக்கூடிய ஓர் தரத்தை இயேசு கொடுத்திருக்கிறார். ஓர் மனுஷன் பிரமாணங்களை வெளிப்பிரகாரமாக மீறுதபடி மிகக் கவனமாயிருந்தாலும், உள்ளாக-பாவம் நிறைந்தவனாய் ஜீவிக்க முடியும். பாவமுள்ள சிந்தனைகள், உணர்ச்சிகள், விருப்பங்களே பாவத்தின் கிரியைக்குக் காரணம். நாம் சுத்தமான ஜீவியம் ஜீவிக்கும்படி உட்புறத்தைச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்றே இயேசு கற்பிக்கிறார்.

''மோசே, தீர்க்கதரிசிகள் ஆகியோர் கொடுத்த பிரமாணங்களைத் தகர்க்கும்படி நான் வந்தேன் என்று எண்ணாதிருங்கள். நான் அவற்றை அழிக்கும்படி வராமல் அவற்றிற்கு உயிரூட்டும் படியும், உண்மைக் கருத்தை அளிக்கும் படியும் வந்தேன்.'' மத்தேயு 5:17.

''கொலை செய்யாதிருப்பாயாக'' என்று நமது முன்னோர் சொன்னதைக் கேள்விப்பட்டி-ருப்பீர் கள்.........ஆனால் நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன் ......... தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.''
மத்தேயு 5:21,22.

''விபசாரம் செய்யாதிருப்பாயாக'' என்று சொன்னதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; ஆனால் நான் சொல்லுகிறேன் ஓர் ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன்னிருதயத்திலே அவளோடு விபசாரம் செய்தாயிற்று.' மத்தேயு 5:27,28.

## நீர் செய்ய வேண்டியது

6. தேவன் நம் எண்ணங்கள், உணர்ச்சிகளுக்கு நம்மைப் பொறுப்பாளிகளாகக் கருதுகின்றார் ?
   (*a*) இல்லை. தமது எண்ணம், சிந்தனைகளைக் குறித்து யாரும் ஒன்றும் செய்ய முடியாது.
   (*b*) ஆம். எமது எண்ணங்களும் சிந்தனைகளுமே எமது கிரியைகளுக்குக் காரணம்.

**அன்பின் பிரமாணம்,**

இயேசுவின் இராஜ்யத்தில் 'அன்பே' பிரதான பிரமாணம். தேவன் மேலுள்ள அன்பும், ஒருவர் மேல் ஒருவருக்குள்ள அன்பும்.

பிரமாணங்களைப் போதிக்கும் ஓர் போதகர் ''பிரமாணங்களிலே பிரதான பிரமாணம் எது' என்று கேட்டார்? இயேசு அதற்கு, ''நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை'' என்றார். இரண்டாம் பிரதான கற்பனை எதுவெனில் ''நீ உன்னைப்போல் பிறனையும் நேசி'' என்பதே. மோசேயினதும், தீர்க்கதரிசிகளினதும் சகல பிரமாணங்களும் இவ்விரண்டின் மேலும் கட்டப்பட்டவை'' என்றார். மத்தேயு 22:35-40.




உங்கள் சினேகிதரை சினேகித்து பகைஞரைப் பகையுங்கள் என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் பகைஞரைச் சினேகியுங்கள். உங்களை நிந்திப்பவர்களுக்காக ஜெபியுங்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் பரமபிதாவின் புத்திரராவீர்கள். ஏனெனில் அவர் சூரியனை பொல்லாதவர்கள் மேலும் நல்லவர்கள் மேலும் உதிக்கப் பண்ணுகிறார், மழையை தீயவர் மேலும் நல்லவர் மேலும் பெய்யப் பண்ணுகிறார்.
மத்தேயு 5:43-45.

**நீர் செய்ய வேண்டியது**

7. இப்பகுதியை மீண்டும் வாசிக்கவும்

8. பிரதான கற்பனைகள் என்று இயேசு கூறிய இரு கற்பனைகளையும் மனப்பாடம் செய்க.

## இயேசுவின் பிரமாணங்களைக் கைக்கொள்ளல்.

தற்போதும், மரணத்தின் பின்வரும் ஜீவியத்திலும் ஆனந்தமான வாழ்க்கை நடத்துவதற்கு இயேசுவின் பிரமாணங்களை ஒருவர் கைக்கொள்ளுவதில் தங்கியிருக்கின்றது, என்று இயேசு கூறுகின்றார்.

> என்னைக் கர்த்தாவே, கர்த்தாவே என்றழைத்தும், ஏன் என் கற்பனைகளை நீங்கள் கைக்கொள்ளுவதில்லை. என் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்கிறவனே கன்மலையின்மேல் தன் வீட்டின் அஸ்திபாரத்தை இடுபவனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து மோதியும், அது உறுதியாயிருந்தது. என் வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்யாதவனே தன் வீட்டின் அஸ்திபாரத்தை மணலின்மேல் இட்டவனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து மோதிய போது அது இடிந்து போயிற்று. அதின் வீழ்கை எவ்வளவு பெரிது. லூக்கா 6:46-49.




யாருமே தனது சுயபெலத்தினால் இயேசுவின் பிரமாணங்களைக் கைக்கொள்ள முடியாது. எமக்குள் பாவ சுபாவங்களாகிய பிடிவாதம், சுயநலம், போன்றவையே இதற்குக் காரணம். அப்படியானால் எப்படி நாம் அதைக் கடைப்பிடிக்க முடியும்?

சமயத்தலைவனாகிய நிக்கதேமுவோடு பேசிக்கொண்டிருந்த வேளையில் இயேசு இதற்குரிய இரகசியத்தைக் கூறினார். இயேசு சொல்வதை நாம் செய்யக்கூடியதாக தேவன் நம்மை மாற்றியமைப்பார். பரிசுத்தாவியானவர் நாம் இதைச் செய்வதற்கு நமக்குதவி செய்வார். இதை இயேசு ''மறுபடியும் பிறப்பது'' என்று கூறினார். இது நடைபெற்றதும் நாம் தேவ பிள்ளைகளாய் மாறி புதிய சுபாவத்தைப் பெறுகிறோம்.

கோடிக்கணக்கான ஜனங்கள் இவ்வனுபவத்தை பெற்றிருக்கின்றனர். இவ்வுலகத்தில் இயேசுவைப் பின்பற்றும் அற்புதமான புதிய ஜீவியத்தை அவர்கள் பெற்றிருக்கின்றனர். பரலோகத்து ராஜ்யத்தில் தேவனின் அழகிய நித்தியமான வீட்டை அவர்கள் எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

## ஜெபம்.

தேவனே என் ஜீவியம் அழிந்து போவதை நான் விரும்பவில்லை. தயவு செய்து எனக்குள் இருக்கும் தீய சுபாவங்களை அகற்றும். என்னைப்புதிதாக மாற்றி உமதன்பை எனக்குள் ஊற்றும். இயேசுவின் போதனைகளின்படி என் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப உதவி செய்யும். தயவு செய்து என்னை உமது பிள்ளையாக மாற்றும். ஆமென்.

## நீர் செய்ய வேண்டியது

9. கீழே கூறப்பட்டுள்ளவற்றுள் நாம் செய்யும்படி இயேசு சொன்னவற்றை வட்டமிடுக.

| | |
|---|---|
| 1. தேவனை நேசி | 7. நியாயந் தீர் |
| 2. கோபங் கொள் | 8. களவெடு |
| 3. நற்கிரியைகள் | 9. வெறுப்பு |
| 4. எதிரிகளுக்காக ஜெபி | 10. மன்னி |
| 5. ஒருவரையொருவர் நேசி | 11. பாதகங்கள் |
| 6. இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படி. | 12. கொலை. |

10. நியாயத்தீர்ப்பென்னும் புயலைத் தாங்கி நித்திய காலமும் நீடிக்கும் வாழ்க்கை எது ?

(a) இயேசுவின் போதனைகளுக்குக் கீழ்ப்படிந்த ஜீவியம்.

(b) தன்னைத்தானே பிரியப்படுத்தும் ஜீவியம்.

(c) மற்றவர்களைப் பிரியப்படுத்தும் ஜீவியம்.

11. நீர் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தை பெற்றிருந்தால், தேவன் உம்மைத் தமது பிள்ளையாக்கிக் கொண்டதற்காகஅவரைத் துதியும். இதுவரை மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைக் நீர்பெற்றிருக்காவிட்டால் பெற விரும்புகிறீரா ? ..................... விரும்பினல், மேலுள்ள ஜெபத்தை வாசியுங்கள். தேவனேடு அதைப்பற்றி பேசுங்கள்.

## வாழ்த்துக்கள்

இப்பாடத் தொகுதியின் அரைப்பகுதியை நீர் முடித்து விட்டீர். இப் பகுதி எங்கள் கையிற்கிடைத்ததும் இதற்கு புள்ளியிட்டு நான்காம் பகுதியுடன் உமக்கு அனுப்பி வைப்போம். நீர் ஆறும் பகுதியை முடித்ததும், அழகான சான்றிதழ் பத்திரமொன்றைப் பெறுவீர். இப்பாடங்களைப் படித்து உமது ஜீவியத்தில் அவற்றை நீர் செய்யும் வேளையில் தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.

**கேள்விகளும், குறிப்புகளும்.**

.................................................................

.................................................................

உமது பெயர் .................................................

விலாசம் .....................................................

.................................................................

வயது .........................................................

சமயம் ........................................................


ICI Nearest Centre

ICI UNIVERSITY

1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016

PHONE : +91-44-4351 9774

Email : iciuniversitymdrs@gmail.com